[24th March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just stated that the departmental proceedings are pending.

Artisan Repatriates from Ceylon (Loan)

* 1047 *Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கொழும்பிலிருந்து விரட்டப்பட்ட தமிழ் நாட்டு, சலவை, சவர, கொல்லர், சோப்பு செய்பவர்களுக்கு அரசாங்கம் கடன் உதவி ரூ. 250 பெற வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு மனுசெய்யவேண்டுமென்று நெல்லை மாவட்ட கலெக்டர் அறிவித்து இருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், நகரப்புரத்திலே வாழும் இந்த தொழிலா ளர்கள் யாருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும் ?

(உ) கிராம பஞ்சாயத்துப் பகுதியில் இருக்கும் தொழிலாளிகளுக்கு மட்டும்தான் இந்தச் சலுகையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The artisan repatriates living in Block Development areas should apply to Block Development Officers and those in non-block areas to the Tahsildars or the Special Tahsildars for loans, within whose jurisdiction they reside.

(*c*) All artisan repatriates from Ceylon, irrespective of their place of residence, are eligible for this concession.

Manganallur–Veerasolan Road

* 1048 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை ஜில்லா ஆடுதுறையிலிருந்து மங்கநல்லூர் வீரசோழன் சாலைக்கு எப்போது கிராவல் போடப்படும் ?

(இ) அந்த சாலை இப்போது P.W.D.-லிருந்து ஹைவேஸுக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The work is not included in the Third Five-Year Plan at present.

(*b*) No, Sir.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுரை to மங்கநல்லூர் செல்லும் இந்த வீரசோழன் சாலை மூன்று தாலுக்காக்களில் இணைக்கப் பட்டிருக்கின்றன. இந்த இடத்தில் வீர சோழ மன்னனே ஆண்டதினால் அதற்கு அப்பெயர் வந்தது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் ரோட்டு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. பி. டிப்ள்யூ. டி. பராமரிப்பில் இருக்கிறது. இதை ஹைவேஸுக்கு மாற்றி கிரேவல் போட்டு விட்டால் பஸ் போக்குவரத்திற்கு சௌகரியமாக இருப்பதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது இருக்கும் கண்டிஷனைப் பார்த்து மெட்டல் ரோடு பரப்பப்பட்ட பின்னால் கவனிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : ஆற்றோரமாக ரோடுகள் போடுவதில் பி. டிப்ள்யூ. டி.-யா, ஹைவேஸ்ஸா என்ற இரண்டும்கெட்ட நிலைமை இருப்பதனால் ஏதாவது ஒரு நல்ல பராமரிப்பிலே ஒரு புது முறையை சர்க்கார் வகுக்குமா ?